
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1130**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**151**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஆ.த.சதாசிவம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# ஆ.த.சதாசிவம்; அண்ணா அறிவாலயத்தின் காவலர்!

ஓவியம் : ரவி பேலட்



“இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப்பார்க்க முடியாத அளவிற்கு தலைமைக் கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்” என இன்றைய கழகத் தலைவர் அவர்களால் போற்றப்பட்ட உடன்பிறப்பு சதாசிவம். தலைமை நிலையச் செயலாளராகச் செயல்பட்டு, தலைமைக் கழகத்தைத் தேடி வரும் உடன்பிறப்புகளின் உள்ளங்களை அறிந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணம் அறிந்தவர்.

“சதாசிவத்தின் எளிமை, அவர் கொண்டிருக்கிற இயக்க ஆர்வம், இவை எல்லாம் அளவிட முடியாதது. அத்தகைய நல்ல தொண்டரை கழகம் பெற்றிருக்கிறது. இவர்களைப் போன்ற உண்மையான, உறுதியான உடன்பிறப்புகள் இருக்கின்ற காரணத்தால்தான், எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையே சூழ்ச்சிகள் மண்டி வந்தாலும்கூட, அவற்றை எல்லாம் எதிர்த்து, சூறாவளி வேகத்தில் இந்தக் கழகம் வளர்ந்துகொண்டிருக்கிறது. வெற்றிகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வெற்றிக்குக் காரணமாக இருக்கின்ற தொண்டர்களிலே ஒருவர், நம்முடைய அருமைத் தம்பி சதாசிவம்” என முத்தமிழறிஞர் கலைஞர் பெருமையுடன் குறிப்பிட்ட உடன்பிறப்பு.

சதாசிவம் அவர்களின் சொந்த ஊர், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் உள்ள ஆட்சிப்பாக்கம் எனும் கிராமம். 1950-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 3-ஆம் தேதி பிறந்தவர். இவருடைய தந்தை தங்கவேலு, திராவிட இயக்கத்தின் தீவிர பற்றாளராகவும் கழகத்தின் உறுப்பினராகவும் செயல்பட்டவர். அதனால், இவரது பள்ளிக் காலத்திலேயே கழகத்தின் மீதும் கலைஞர் மீதும் ஈர்ப்பு கொண்டவராக இருந்தார்.

இவரின் பள்ளிப்படிப்புக்குப் பின்னர், குடும்பம் சென்னையில் வந்து வசிக்கத் தொடங்கியது. அப்போது முதல், கழகப் பணிகளில் நேரடியாக இணைந்து செயல்படத் தொடங்கினார். குறிப்பாக, ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தைத் தொடங்கி நடத்தியவர்.

### படிப்படியாகக் கழகப் பொறுப்பு

நெருக்கடிநிலை காலத்தில், சென்னை 76-வது வட்ட பொறுப்பிலிருந்த நிர்வாகி காவல் துறை அச்சுறுத்தலால் பொறுப்பிலிருந்து விலகினார். அதையடுத்து, கழகத்தின் கோட்டையாக இருந்த சென்னை மாவட்டத்தில், ஒரு வட்டக் கழகச் செயலாளர் இல்லாத நிலை ஏற்பட்டபோது, தலைவர் கலைஞர் அவர்களால் 76-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர், வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபோது, அவருக்கு வயது 26-தான். அந்த அளவுக்கு, இளமையிலேயே கழகப் பணியில் துடிப்பானவராக, நம்பிக்கை அளிப்பவராகச் செயல்பட்டவர் சதாசிவம். பின்னர், ஆயிரம் விளக்கு பகுதிப் பிரதிநிதி, பகுதிப் பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி எனக் கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, கழகத் தோழர்களிடம் நன்மதிப்பைப் பெற்றவர். தலைமைக் கழக நிர்வாகிகளாக இருந்த முன்னோடிகள் சாதிக் பாட்ஷா, என்.வி.என்.சோமு, ஆயிரம் விளக்கு உசேன் போன்றோரிடம் நெருங்கிப் பழகி, கழகப் பணியில் தனது முத்திரையைப் பதித்தவர்.

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் ஆயிரம் விளக்குத் தொகுதியில் போட்டியிட்ட போது, அவருக்குத் தலைமை தேர்தல் முகவராக இருந்து பணியாற்றி, கலைஞரின் கவனத்தைப் பெற்றவர். தொடர்ந்து கழகத் தலைவர் ஆயிரம் விளக்குத் தொகுதியில் போட்டியிட்டபோதெல்லாம் சதாசிவம்தான் தலைமைத் தேர்தல் முகவராக இருந்து, கழகத் தோழர்களோடு இணைந்து தலைவரின் வெற்றிக்குக் கண் உறங்காமல் உழைத்தவர். சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் செயல்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

### தலைமை நிலையச் செயலாளர்

சதாசிவம் அவர்களின் அர்ப்பணிப்பான உழைப்பு, தலைவர் கலைஞரிடமும் இன்றைய கழகத் தலைவர் அவர்களிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைக் கொண்டுவந்தது. கழகப் பணியின் தொடர்ச்சியாகத் தலைமை நிலையச் செயலாளராக சதாசிவம் அவர்கள் நியமிக்கப்பட்டார். ‘‘சதா அண்ணா அறிவாலயத்திலேயே இருக்கின்ற காவலர்களில் ஒருவராக அவர் இருப்பதால்தான், அவர் பெயர் சதாசிவம். எப்போதும் அண்ணா அறிவாலயத்திலேயே இருந்து என்னை வரவேற்கும் ஒருவர்” என அந்தப் பொறுப்பில் அவர் செயல்பட்ட விதத்தை, சதாசிவம் அவர்களின் இல்ல மணவிழாவில் குறிப்பிட்டுள்ளார் கலைஞர்.

கழகப் பணிகளினூடே ‘இந்து’ நாளிதழ் குழுமத்தில் பொறியாளராகப் பணியாற்றியவர். இந்து தொழிற்சங்கத்தில் பொறுப்பு வகித்துள்ளார். தவிர, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆலோசனைக்குழு உறுப்பினர், பி.எஸ்.என்.எல். ஆலோசனைக்குழு உறுப்பினர், சென்னைத் துறைமுகம் பொறுப்புக்குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளை ஏற்று, திறம்படப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகத்தின் எந்தப் பணியானாலும் அதில் சதாசிவம் அவர்களின் பங்கு முக்கியமானதாக இருக்கும். சட்டமன்ற - நாடாளுமன்ற - உள்ளாட்சி பொதுத் தேர்தல்களின்போது, தலைமைக் கழகத்தின் பொறுப்பாளராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். கழகத்தின் மண்டல - மாவட்ட மாநாடுகளின் போது, ஊடகங்களை ஒருங்கிணைத்து அழைத்துச் செல்லும் பொறுப்பை தொடர்ச்சியாக மேற்கொண்டவர். அந்தப் பணி கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் கவனம் பெற்றது. அதில் சதாசிவம் அவர்களின் பணி மெச்சத்தகுந்ததாக இருக்கும் என்கின்றனர். கழகத்தின் அமைப்புத் தேர்தல்களில் தலைமைக் கழக நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பான பங்களிப்பினைச் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இன்றைய கழகத் தலைவர் அவர்களுக்கும் தோளோடு தோளாக நின்று கழகப் பணியாற்றி வந்த சதாசிவம் அவர்கள், 2017-ஆம் ஆண்டு மார்ச் 29-ஆம் தேதி, உடல்நலக்குறைவு காரணமாக, எதிர்பாரா வகையில் இயற்கை எய்தினார். தலைமை நிலையச் செயலாளராக 14 ஆண்டுகள் அர்ப்பணிப்போடு அரும்பணியாற்றிய சதாசிவம் அவர்களின் மறைவு, கழகத்திற்குப் பேரிழப்பு என இரங்கல் எழுதினார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். “தலைமைக் கழகம் இருக்கும் அண்ணா அறிவாலயத்தையும் சதாசிவம் அவர்களையும் பிரித்துப் பார்க்க முடியாது” என்றது அவரது இரங்கல் உரை . சதாசிவம் அவர்கள் கழகக் குடும்பத்தில் இருந்து வந்ததைப் போலவே, அவரது குடும்பத்தையும் கழக உணர்வுடன் இயங்க வைத்தவர். “அறிவாலயத்தைக் காத்து, கழகத்தையும் வளர்த்தவர்” என கலைஞரால் போற்றப்பட்ட சதாசிவம் அவர்களின் எளிமை, தொண்டுள்ளம், இயக்க ஆர்வம் எல்லாம் தலைமுறை தாண்டியும் நிலைத்து நிற்கும்.

> “தலைமைக் கழகம் இருக்கும் அண்ணா அறிவாலயத்தையும் சதாசிவம் அவர்களையும் பிரித்துப் பார்க்க முடியாது!”

...துடிக்கும்

---

## புதிய வரலாறு படைக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

கூட்டணி விவகாரத்தில் கழகத் தலைவர் கையாளும் உத்திகளை, இந்தியத் துணைக்கண்டத்தின் அத்தனை அரசியல் கட்சிகளும் புருவம் உயர்த்திப் பார்க்கின்றன. இது தொடர்பாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள விக்னேஷ் ஆனந்த் என்பவர், “எனது அனுபவத்தில், இவ்வளவு நுட்பமான மேலாண்மைத் திறனும் எதிர்காலத்தைப் பற்றிய தெளிவான தொலைநோக்குப் பார்வையும் கொண்ட ஒரு தலைவரை நான் கண்டதில்லை. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நிர்வாக முறையும், அரசியல் அணுகுமுறையும் ’செயல்பாட்டுத் திறனுக்கு’ (Operational Excellence) ஒரு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

பல தலைவர்கள், ஒரு திட்டம் தோல்வியடையும்போது, மாற்றுத் திட்டங்களைத் தேடித் தடுமாறுவார்கள். ஆனால் மு.க.ஸ்டாலின் அவர்களின் வியூகம், பிளான் இசட் ‘Plan Z’ வரை நீண்டது. அந்த வியூகத்தின் சிறப்பம்சமே, ‘Plan Z’ என்பது பின்வாங்குவதற்கான வழியல்ல; அது ‘Plan A’-வை எவ்வித தடையுமின்றி வென்றெடுப்பதற்கான இறுதிவரை ஓயாத உழைப்பைக் குறிப்பதாகும். இது அவர் முன்னர் குறிப்பிட்ட Do and Die என்ற அறைகூவலுக்கு உயிர் கொடுப்பது போல் அமைந்துள்ளது. ஓர் இலக்கை நிர்ணயித்துவிட்டால், அதில் முழுமையான முடிவுகளைப் பெறும் வரை ஓயாமல் செயல்படுவதே அவரது பாணி.

2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்பே, ‘பா.ஜ.க-வுடன் எப்போதும் கூட்டணி கிடையாது’ என அவர் ஒரு தீர்க்கமான உறுதி மொழியை வழங்கினார். பதவி சுகத்திற்காகவோ அரசியல் லாபத்திற்காகவோ தனது சொல்லிலிருந்து அவர் ஒருபோதும் பின்வாங்கியதில்லை. இது, வெறும் அரசியல் முடிவு மட்டுமல்ல; ஒரு சித்தாந்தப் போர். தனது நிலைப்பாட்டில் சமரசம் செய்துகொள்ளாத குணமே இன்று மக்களிடம், அவர் பெற்றுள்ள மிகப் பெரிய நம்பிக்கைக்கு அடித்தளமாக இருக்கிறது. அரசியலில் புதிய கூட்டணிகளை உருவாக்குவதும் ஏற்கெனவே உள்ள கூட்டணிகளைத் தக்கவைப்பதும் ஒரு தனிநபரின் ஈகோவைக் (EGO) கடந்து சிந்திக்க வேண்டிய விஷயம். அதை முதல்வர் ஸ்டாலின் மிகச் சிறப்பாகச் செய்கிறார். வியூகங்களை வகுப்பதிலும் சரி, அதனை செயல்படுத்துவதிலும் சரி, அவர் ஒரு புதிய வரலாற்றைப் படைத்துவருகிறார்” என நீள்கிறது அவரது பதிவு.

---

## ஃப்ளாஷ்பேக்



ஜே.கருப்பு ராஜ்குமார்



### வாழ்க்கையில் கிடைத்த அரிய வாய்ப்பு!

1993-ஆம் ஆண்டு, மதுரை மாநகரில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் அண்ணா அறிவாலயம் வந்து, நம் தானைத் தலைவரை சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். மாநகர் மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எனக்கு, நம் இனமானத் தலைவர் தன் பொற்கரங்களால் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். என் வாழ்நாளில் கிடைத்த மிகப் பெரிய சொத்துப் பத்திரம், இந்தப் புகைப்படம்! அன்றைய மாநகர் செயலாளர் அண்ணன் மறைந்த சோ.காவேரிமணியம் மற்றும் என்னுடன் இணைந்து கழகப் பணியாற்றும் நண்பர் ஜே.மரியா ஆகியோர் படத்தில் இடம்பெற்றுள்ளனர்.

**– ஜே.கருப்பு ராஜ்குமார்,**
**மாநிலப் பொதுக்குழு முன்னாள் உறுப்பினர்,**
**பாஸ்டின் நகர், பெத்தானியாபுரம்,**
**மதுரை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்வலம்!

1996-ஆம் ஆண்டு, ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில் திருச்சியில் தி.மு.கழகத்தின் எட்டாவது மாநில மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. திருச்சி திக்குமுக்காடிப் போகும் அளவுக்கு 26-ஆம் தேதி மாலையில் பிரமாண்ட ஊர்வலம் நடைபெற்றது. ஓரிடத்தை அந்த ஊர்வலம் கடந்து செல்ல 14 மணிநேரம் ஆனது. ஏனெனில், ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் எண்ணிக்கை 25 லட்சம் பேர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.